1987 ஏப்ரல் 4]

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இங்கே லாட்டரி சீட்டு மூலமாக எவ்வளவு வரி நமது அரசிற்குக் கிடைத்திருக்கிறது என்ற விவரத்தை நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பரிசு விழுந்து பெறாத தொகை எவ்வளவு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வரி ஏய்ப்பை ஒழிக்கத் திட்டம்.

296—(* வினா எண் 11561) திரு. செ. செம்மலை : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரி ஏய்ப்பை ஒழிக்க அரசிடம் தனித்திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வரி ஏய்ப்பைப்பற்றி வரும் புகார்கள் மீது வணிகவரித் துறையின் செயலாக்கப் பிரிவினரால் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகிறது. தேவையான இனங்களில் கடைத்தணிக்கை மற்றும் வீட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. திட்டவட்டமாக வரி ஏய்ப்புப்பற்றி புலன் கூறும் தனி நபர்களுக்கும், தனி இனங்களில் ரூ. 25,000 வரிக்குக் குறையாமல் புலனாய்வு செய்து வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கும் அலுவலர்களுக்கும் வெகுமதி அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

தணிக்கைச் சாவடிகள், தனிப் பிரிவுகளின் மூலமாகவும் தீவிர கண்காணிப்பு செய்து வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வரி ஏய்ப்பு வாய்ப்பு அதிகமாக உள்ள இனங்களில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வரி ஏய்ப்புக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, விதிக்கப்பட்ட வரிகள் ஒழுங்காக வசூலிக்கப்பட்டு விட்டால் புதிய வரிகள் போட வேண்டிய அவசியம் இருக்காது என்பது பொதுவான நியதி. வரி ஏய்ப்பு இருக்கக்கூடாது என்ற அந்த அடிப்படையில் தற்போது கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் சினிமா டிக்கட்டுகள், தினசரி வசூல் பதிவேடுகள் ஆகியவற்றில் வணிக வரி அதிகாரிகளின் முத்திரை பெறப்படுவதைப் போல தமிழ் நாடு பொது விற்பனை வரி விதி 26-ன்கீழ் பேணப்படும் அனைத்துப் பதிவேடுகளிலும் இப்படி வணிகவரி அதிகாரிகளுடைய முத்திரையைப் பெறுவதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் நிறைய வரி ஏய்ப்பு, போலிப் பதிவேடுகள் ஏற்படுவது தடுக்கப்படுமே. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி இப்படிப்பட்ட சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய யோசனை தற்போது அரசிடத்திலே இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பற்றி ஆய்வு செய்யலாம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, இப்படித் தகவல் கொடுப்பவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாகச் சொன்னார்கள். வெகுமதி கொடுப்பது என்றால். ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு இப்படி வெகுமதி வழங்கப்படுவது வழக்கம். எனவே வரி ஏய்ப்பு ஒரு குற்றமாகக் கருதப்படவேண்டும். அப்படித்தான் நாம் கருதிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் நடைமுறையில் அப்படி வரி ஏய்ப்பு செய்வதை ஒரு குற்றமாகக் கருதுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், வணிகர்கள் மத்தியிலே, 'இதை நாங்கள் சாமர்த்தியமாக செய்து வரி கட்டுவதிலிருந்து தப்பித்துக் கொள்கிறோம்' என்று நினைக்கிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றனவே தவிர, வரி ஏய்ப்பு என்பது ஒரு குற்றமாக தற்போது கருதப்படுவதில்லை. பொதுவாக வரி ஏய்ப்பு செய்கிறவர்கள் சமுதாயத்திற்கு எதிராக தாங்கள் ஒரு பெரிய

1987 ஏப்ரல் 4]

குற்றத்தைச் செய்கிறோம் என்று அவர்கள் உணர்கிற வகையில், வரி ஏய்ப்பை ஒரு குற்றமாகக் கருதுகிற வகையில் ஒரு சட்ட திருத்தம் செய்வதற்கோ அல்லது ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பதற்கோ நம்முடைய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வரி ஏய்ப்பு செய்கின்றபோது அதைக் கண்டுபிடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் அரசிடத்திலே இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எந்த யோசனையும் தற்போது அரசிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கூறிக் கொள்ள விரும்புவது, உற்பத்தியாகிற பொருட்களுக்கு உற்பத்தி செய்கிற இடத்திலேயும், மற்ற இடங்களில் முதல் கொள்முதல் நிலையிலேயும், ஒருமுனை வரியாக இலகுவாக அதை வைத்தால் வரி ஏய்ப்பு இருக்காது. அதேசமயத்தில் வரி வசூலும் அதிகமாகி, வருமானமும் கூட இருக்கும். எனவே இதை அமைச்சர் அவர்கள் அமல்படுத்துவார்களா?

வாய்மையே வெல்லும்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமுனை வரியாக இருந்தாலும், பலமுனை வரியாக இருந்தாலும் வரி ஏய்ப்பைச் செய்யவேண்டும் என்று நினைக்கிற சிலர் அதை செய்யத்தான் செய்கிறார்கள். அவற்றை எந்தெந்த அளவிலே கண்டுபிடிக்க முடியுமோ—விதிகளுக்கு உட்பட்ட வகையில்—அப்படிக் கண்டுபிடித்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது.